# கர்நாடக இசையில் மனோதர்ம சங்கீதத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

**பரமேஸ்வரி கணேசகம்பர்**
*இசைத்துறை, SPRFVPA, யாழ்.பல்கலைக் கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

இசை என்பதற்கு 'இசைந்து வாழுதல்' என்றபொருள் உண்டு. இது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அழகு ஒலியாகும். வடமொழியில் இதனை நாதம் என அழைப்பார். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் வசப்படுத்துகின்ற ஆற்றல் இசைக்குண்டு. இனம், மதம், மொழி எல்லாவற்றையும் தன்னகத்தேயடக்கி பண்பாட்டின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ள இசை, உலகெங்கும் பரந்து விரிந்து காணப்படுகிறது. ஓர் இனம் அந்நாட்டின் கலை, கலாசாரம் என்பவற்றை வளப்படுத்துவதன் மூலமே மேம்பாடடைகின்றது. அந்தவகையில் ஆதிகாலத்தில் மனிதன் இசை, நடனம் மூலமாகவே தனது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினான். பின்னர் அனைத்து உணர்வுகளின் வெளிப்பாடாகவும் இசை விளங்கியமையைக் காணலாம். இறைவனையடைவதற்குரிய தோத்திரங்கள் அனைத்தும் இசைவடிவாகவே அமைந்துள்ளவை இசைக்கலையின் மேன்மையை மேலும் வலுப்படுத்துகின்றது. இசைக்கலையின் ஒரு பிரிவே கர்நாடக சங்கீதமாகும். இந்த இசையினை மனோதர்ம சங்கீதம், கல்பித சங்கீதம் என மேலும் இருபிரிவுகளாக்கலாம். ஆரம்ப பாடங்களான ஸ்வரவரிசை, ஜெண்டைவரிசை, மேல்ஸ்தாயி வரிசை, அலங்காரம், கீதம், வர்ணம் ஆகியவை கல்பித சங்கீதப் பிரிவில் அடங்குபவை. இராக ஆலாபனை, கற்பனை ஸ்வரம், நிரவல் ஆகிய பகுதிகள் மனோதர்ம சங்கீதப் பிரிவினுள் அடங்குபவை. இசைக் கலைஞர்கள் குரலிசையாலும் மற்றும் கருவிசையாலும் நமது கற்பனைத்திறனை இலட்சியம் தவறாது வெளிப்படுத்துவதையே மனோதர்ம சங்கீதம் என அழைக்கின்றோம். இத்தகைய மனோதர்ம சங்கீதத்தைக் கற்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கும் நோக்கமாகக் கொண்டு விவரண ஆய்வு முறையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. துறைசார்ந்த அறிமுறை நூல்கள், ஆய்வாளர் நேரடியாகக் கள ஆய்வின் மூலம் பெற்ற தரவுகள், ஆய்வாளரின் சொந்த அனுபவங்கள் என்பவை ஆய்வு மூலங்களாகப்பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பயனாக கர்நாடக சங்கீதத்தின் மேன்மையானது மனோதர்ம சங்கீதத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுத்தப்படுவதுடன் இவ் ஆய்வு இசை பயிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், இசைக்கருவிகளை பிரதான பாடமாகக் கற்போருக்கும், இசைப் பாடத்திட்டம் உருவாக்கத்தின்போதும் பயன் தரக் கூடியதாய் அமையும். நிரவல் செய்யப்பட வேண்டிய எடுப்பினை அவதானித்தல், நிரவலுக்குரிய பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்தல், அனைத்து மத்திமகாலக் கிருதிகளும் நிரவல் செய்யப் பொருத்தமற்றவை என்பதை அறிதல், கிருதியின் பொருளைச் சிதைக்காது நிரவல் அமைத்தல் வேண்டும் போன்றன நிரவலுக்குரிய பரிந்துரைகளாகவும்; கற்பனை ஸ்வரத்தின் முடிவு ஸ்வரமும் கீர்த்தனையும் எடுப்பு ஸ்வரமும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஸ்வரம் பாடும் போது ¼, ½, ¾, 01, 1½, 02 என ஆவர்த்தனங்கள் என ஏறு வரிசையில் அமைத்தல் வேண்டும். பாடிய ஸ்வரங்களை மீண்டும் பாடுதல், மனனம் செய்து பாடுதல் என்பவை தவிர்க்கப்படுதல் போன்றன கற்பனை ஸ்வரத்திற்குரிய பரிந்துரைகளாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்** - கேள்விஞானம், ஸ்வர ஞானம், மனோதர்ம சங்கீதம், சாதகப் பயிற்சி.